QIAMS

காயிதேமில்லத் சர்வதேச கல்விக்கான ஊடக அகாடெமி

A Google News Initiative Training

# “மெய்ப்பொருள் காண்பது அறிவு”

உண்மைக்குப் புறம்பான செய்திகளை
கண்டறிவது எப்படி?

- சிறப்புப் பயிற்சிப்பட்டறை -

பயிற்சியாளர்: **ஐயன் கார்த்திகேயன்**, B.Tech
இணைநிறுவனர், ஆசிரியர் - www.youturn.in

நாள்: **19-10-2019, சனிக்கிழமை**
நேரம்: **காலை 9.30 மணி** முதல் **12.30** வரை

இடம்: **QIAMS, 82, ஸ்டெர்லிங் சாலை,**
(நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில், இலயோலா கல்லூரி எதிரில்)

**முன்பதிவு அவசியம்**

தொலைபேசி: **044 4858 1896**

www.qiams.in

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"**

என்றான் திருவள்ளுவன். கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து, இன்றைய நவநாகரீக டிஜிட்டல் யுகத்தில் ஊடக உலகம் அசுரத்தனமான செய்திப் பரிமாற்றங்களைச் சந்தித்து வரும் வேளையில் வள்ளுவனின் கூற்று அதிமுக்கியத்துவம் பெறுகின்றது.

சாமானியக் குடிமகனும் சுலபமாக ஊடக உலகினுள் பங்கெடுக்கும் வண்ணம் உருமாற்றியிருக்கும் டிஜிட்டல் தொழில்நுட்பம் வரவேற்கத்தக்கது எனினும், நவீன டிஜிட்டல் தொழில்நுட்பக் கருவிகள், ஊடக அறம் சார்ந்து பயன்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்வியும் எழாமல் இல்லை. உண்மை செய்திகளோடு திரிக்கப்பட்ட செய்திகளும் உலா வரும் அசாதாரணமான காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம். இதிலிருந்து மீள, பரிமாறப்படும் தகவல்களின், செய்திகளின் உண்மை நிலையை, மெய்ப்பொருளைக் கண்டறிய, தொழில்நுட்ப ரீதியாக பயிற்சி தேவைப்படுகிறது. Google நிறுவனத்தால் இதற்கான பயிற்றுனராக சான்றளிக்கப்பட்டு இருக்கும் திரு. ஐயன் கார்த்திகேயன் ஊடக உலகில் திரித்துக் கூறப்படுபவற்றை கண்டறிய எடுக்கும் 3 மணி நேர சிறப்பு பயிற்சிப் பட்டறையே "மெய்ப்பொருள் காண்பது அறிவு"

ஊடகவியலாளர்கள் அனைவரும் வருக. பயன் பெறுக.

---

## பயிற்சித் தலைப்புகள்:

1. திரிக்கப்பட்ட செய்திகளின் வகைகள்
2. உண்மைச் செய்தியை எப்படிக் கண்டறிவது
3. ஆதாரங்களை பகுப்பாய்வு செய்தல்
4. புகைப்படங்களின் உண்மைத் தன்மையை கண்டறிவது
5. வீடியோக்களின் உண்மைத் தன்மையை கண்டறிவது
6. டிஜிட்டல் பாதுகாப்பு

---

## பயிற்சியாளர் குறிப்பு:

செய்திகளின் உண்மைத்தன்மையை கண்டறியும் தமிழின் முதல் தளம் www.youturn.in இதன் இணைநிறுவனர் மற்றும் ஆசிரியர் திரு. ஐயன் கார்த்திகேயன். கூகுளால் சான்றளிக்கப்பட்ட பயிற்சியாளர். www.youturn.in இணையதளம் தேசி (Desi) விருதுகளில் சிறந்த தகவல் தொடர்புக்கான விருதை வென்றது. BBC, புதியதலைமுறை, தமிழ் இந்து, விகடன் உட்பட பலரும் இந்த முயற்சியை பற்றி செய்தி வெளியிட்டுள்ளனர். பல்வேறு தொலைக்காட்சி விவாத நிகழ்வுகளிலும் பங்கெடுத்து வருகிறார். Tedx Talk எனும் உலகளவில் பிரபலமான தளத்தில் பேசியுள்ளார். ஐயன் கார்த்திகேயன் இதழியல் துறை சார்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இளம் பத்திரிகையாளர்களுக்கு கூகுள் பயிற்சி அளித்துவருகிறார். அதில் செய்தி எப்படி திரித்துக் கூறப்படுகிறது, அதை எப்படி கண்டறிவது என்றும் பயிற்சி கொடுத்து வருகிறார்.